ந.க.எண். 305/2023/ஊ

மாவட்ட மேலாளர் அலுவலகம்
டாஸ்மாக் லிட்., மதுரை தெற்கு
நாள்: .03.2023

**டாஸ்மாக் லிட்., மதுரை தெற்கு மாவட்டம் விற்பனை வளர்ச்சி சதவீதம் குறைவு குறித்தான மேற்பார்வையாளர்கள் ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள்**

டாஸ்மாக் லிட்., மதுரை தெற்கு மாவட்டம், மாவட்ட மேலாளரால் மதுபானக் கடைகளின் விற்பனை வளர்ச்சி சதவீதம் குறைவாக இருப்பது தொடர்பாக 07.03.2023 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது.

மதுரை தெற்கு மாவட்ட மதுபானக்கடைகளில் கடந்த பிப்ரவரி 2023 மாதத்தில் விற்பனை வளர்ச்சி சதவீதம் IMFS – 9% & Beer – 12% ஆக இருந்தது. தற்போது மார்ச் 2023 (06.03.2023 வரை) விற்பனை வளர்ச்சி சதவீதத்தை ஆய்வு செய்ததில், IMFS – 15% & Beer – 27% ஆகவும் உள்ளது.

விற்பனை வளர்ச்சி சதவீதத்தை அதிகரிக்க அதிக அளவில் விற்பனையாகும் மதுபான வகைகள் தொடர்ந்து கடைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இருப்பினும், வளர்ச்சி விகிதம் குறைவாக இருப்பது கண்டிக்கத்தக்கது. மனமகிழ் மன்றங்களுக்கு அருகில் உள்ள மதுபான கடைகளின் மேற்பார்வையாளர்கள் அப்பகுதியில் விற்பனையாகும் மதுபான வகைகளை தேவைப்பட்டியலில் தனிக்கவனத்துடன் குறிப்பிட்டு பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. வாடிக்கையாளர்கள் கேட்கும் மதுபான வகைகளை விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தாலுகா வாரியாக விற்பனை வளர்ச்சி சதவீதத்தை ஆய்வு செய்ததில், கிராமப்புற பகுதிகளில் உள்ள மதுபான கடைகளில் விற்பனை கடந்த ஆண்டைவிட குறைவாக உள்ளதால், அக்கடை மேற்பார்வையாளர்கள் தனிக்கவனம் செலுத்தி, விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மதுபானக் கடைகளுக்கு அருகிலோ அல்லது அப்பகுதியிலோ வெளிமாநில மதுபான வகைகள் கள்ளச் சாராயம் போன்ற மதுவகைகள் ஏதும் புழக்கத்தில் இருந்தால் அதன் விபரத்தை அலுவலகத்தில் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மார்ச் 2023 (06.03.2023 வரை) மதுரை தெற்கு மாவட்டத்தில் IMFS –ல் விற்பனை வளர்ச்சி குறைந்த 109 கடைளும், Beer –ல் விற்பனை வளர்ச்சி குறைந்த 119 கடைகளும் உள்ளதால் கடை வாரியாக மார்ச் 2022 விற்பனையை கணக்கில் கொண்டு மார்ச் 2023-ன் விற்பனை வளர்ச்சியை அடைய தினசரி விற்பனையை கண்காணித்து விற்பனை வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்க அனைத்து மேற்பார்வையாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது.

Scanned with OKEN Scanner

வாடிக்கையாளர்கள் வாங்கும் மதுபானங்களுக்கு உரிய இரசீது வழங்கிட வேண்டுமெனவும், அனைத்து பணியாளர்களும் கடையில் பணிநேரத்தில் பணியில் இருக்க வேண்டுமெனவும், அனைத்து மதுபான வகைகளும் வாடிக்கையாளர்களின் பார்வைக்கு காட்சிப்படுத்திட வேண்டுமெனவும், புதிய மதுபான வகைகள் விற்பனைக்கு வரும்போது அந்த மதுபான வகைகளை வாடிக்கையாளர்களின் பார்வைக்குபடும்படி வைத்திட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

90 நாட்களுக்கு மேலாக கடைகளில் தேங்கியுள்ள மதுபான வகைகளை விற்பனை செய்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது. காலி அட்டைப்பெட்டிகளுக்கான நிலுவைத்தொகை, தணிக்கையாளர் தணிக்கையின்போது கண்டறியப்பட்ட குறைப்பாட்டுத்தொகை, DM/SRM/Flying Squad தணிக்கையின்போது கண்டறியப்பட்ட இருப்பு குறைவுத்தொகை இவற்றை உடன் வங்கியில் செலுத்தவும் அனைத்து மேற்பார்வையாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

மதுபானக் கடைகள் மற்றும் மதுக்கூடங்களில் பிளாஸ்டிக் பொருள்கள் பயன்படுத்தப்படுவதை தடை செய்யவும், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படவில்லை என்ற அறிவிப்பு பலகை வைத்திடவும், கடை மற்றும் கடையின் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்து கொள்ளவும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

08/03/2023

துணை ஆட்சியர் / மாவட்ட மேலாளர்
டாஸ்மாக் லிட்., மதுரை தெற்கு

8-3-23 8/3/23 8/3/23

**பெறுநர்:**

அனைத்து கடை மேற்பார்வையாளர்கள்

விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்கள் - மேற்பார்வையாளர் மூலமாக

**நகல்:**

1. மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக் லிட், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. முதுநிலை மண்டல மேலாளர், டாஸ்மாக் லிட், மதுரை மண்டலம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner